

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில், அப்பல்லோ மருத்துவமனையின் நிர்வாகி டாக்டர் விஜயகுமார் ரெட்டி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தீப் சக்சேனா அவர்களின் மகன் ப்ராஷ் – ஷாமா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ.வேலு, முனைவர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி முகாம் அலுவலகத்தில் நல்லி குப்புசாமி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.3.2026) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் நடைபெற்ற விழாவில், கோட்டூர்புரம் திட்டப்பகுதியில் 307.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 1800 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி முகாம் அலுவலகத்தில், சென்னை மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் சாந்தோம் பேராலய அதிபர் வின்சென்ட் சின்னதுரை மற்றும் ஸ்டேனி ஆகியோர் உள்ளனர்.



காங்கேயம் நெடுஞ்சாலைத்துறை அலுவலக வளாகத்தில் பொதுப்பணித் துறையின் சார்பில் ரூ.83.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காங்கேயம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் என்.கயல்விழி செல்வராஜ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, இல.பத்மநாபன், கே.இ.பிரகாஷ் (ஈரோடு), கே.சுப்பராயன் (திருப்பூர்), க.ஈஸ்வரசாமி (பொள்ளாச்சி), மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் - பரப்புரை !

## மகளிரைத் தேடி வரும் மருத்துவம் - மகளிர் நலம் காக்கும் ‘திராவிட மாடல்’ அரசு!











**சென்னை, மார்ச். 4-**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றியை உறுதி செய்யும் பொருட்டு கழக மகளிரணியினரது வெல்லும் தமிழ்ப்பெண்கள் - வீடு வீடான பரப்புரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து வாக்குச்சாவடிக்களிலும் தீவிரமாக நடைபெற்று வருகிறது.**

நேற்று பரப்புரையின் போது ஸ்டாலினின் மகளிர் படையினர் ‘திராவிட மாடல்’ அரசில் பெண்களின் நலம் பேணும் வகையில் முன்னெடுத்து வரும் நலத் திட்டங்களை முன்வைத்து பரப்புரை மேற் கொண்டனர்.

மகளிருக்கு வரக்கூடிய கருப்பை வாய் புற்றுநோயை தடுக்கும் வகையில் அதற்கான தடுப்பூசியை இலவசமாக வழங்க உத்தரவிட்டுள்ளார் முதலமைச்சர் அவர்கள். அதன்படி தமிழ்நாடு முழுவதும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் படிக்கும் 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது. வெளியே தனியாரில் ஒரு தடுப்பூசிக்கான விலை ரூ.1000 ரூ.2000 வரை இருக்கும் போது ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அதை இலவசமாக நமது அரசு வழங்கி வருகிறது. 3,38,649 பெண்குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முகற்கட்டமாக 30,000 சிறுமிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத வகையில் முதல் முறையாக நமது தமிழ்நாட்டில் தான் இப்படி ஒரு உன்னத திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. என்ற தகவல் எல்லாம் அனைத்து பெண்களிடமும் விளக்கிக் கூறப்பட்டது.

குடும்ப சூழல் காரணமாக மக்கள் மருத்துவமனை வராமல் அவர்களின் உடல்நிலை பாதிக்கப்படுவதை தடுக்க எண்ணிய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டம் தான் மக்களைத் தேடி மருத்துவம். வயதானவர்கள், மருத்துவமனைக்கு வர இயலாதவர்கள் ஆகியோர்களின் வீடுகளுக்கே சென்று மருத்துவம் பார்த்து உடல் நலம் பேணி வருகிறது திராவிட மாடல் அரசு. இந்த திட்டம் அனைவருக்குமானது என்றாலும் இதனால் அதிகமாக பயனடைந்து வருபவர்கள் பெண்கள் தான். இதுவரை 2.5 கோடி மக்கள் பயனடைந்து உள்ள நிலையில் இதில் 1.5 கோடி பெண்கள் பயனடைந்து உள்ளனர். மருத்துவமனைக்கு வராத சுமார் 14 லட்சம் பெண்களின் நோய்கள் கண்டறியப்பட்டு அவர்களின் உயிர்கள் காக்கப்பட்டுள்ளன. வயது மூத்தோர் மட்டுமல்லாது தனது உடல்நலனை கவனிக்காது குடும்பத்திற்காக உழைக்கும் தாய்மார்களும் இந்த திட்டத்தால் பெரிதும் பயனடைந்து வருகின்றனர். மக்களைத் தேடி மருத்துவம் என்பதை விட மகளிரைத் தேடி மருத்துவம் என்றே சொல்லலாம் அந்த அளவு பெண்கள் இதனால் பயனடைந்து வருகிறார்கள்.

இதில்லாமல் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்கள் மூலமும் மக்களின் உடல் நலன் பேணப்பட்டு வருகிறது. இதுவரை 1256 முகாம்கள் நடத்தப்பட்டு 18.52 லட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். இதில் 60% பயனாளிகள் பெண்கள்.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாக மார்பக புற்றுநோய் பரிசோதனை மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுமார் 35 லட்சம் மகளிர் பயனடைந்து உள்ளனர். என்ற தகவல்கள் எல்லாம் ஒவ்வொரு மகளிரிடமும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இப்படி சர்க்கரை , பிரசர் வீட்டுக்கே வந்து பரிசோதனை தொடங்கி இலவச கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி வரை தமிழ்நாட்டு மகளிர் நலம் காக்க பார்த்து பார்த்து செயலாற்றி வருகிறது ‘திராவிட மாடல்’ அரசு.

வீடு வீடாகச் சென்று பரப்புரை மேற்கொள்ளும் ஸ்டாலின் மகளிர் படையினரை பொதுமக்கள் அனைத்து இடங்களிலும் அன்போடு வரவேற்று உபசரித்தனர்.